ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 280) Oct (2)/ 2018



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் ..........................................................................................3

2. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ..........................................................................5

3. ஆசார்ய ஹ்ருதயம்.......................................................................................9

4. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்).....................................................16

5. இராமாநுச நூற்றந்தாதி.............................................................................22

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

# லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 100)

44. ப்ரயோகா: ஸர்வமந்த்ராணாம் யாவந்தோ யாத்ருசாச்ச யே
தாவந்தரஸ் தாத்ருசாஸ்தே அஸ்ய ப்ரயோகா இதி நிர்ணய:
45. அஸ்ய வ்யாஹ்ருதயஸ்திஸ்ரோ வர்ண த்ரய ஸமுத்ககதா:
பத்ப்ய: ஸமுத்ககதா ஹ்யஸ்யா: ஸாவித்ரீ ஸர்வபாவநீ

**பொருள்** – அனைத்து மந்த்ரங்களுடைய ப்ரயோகங்களும் இந்த ப்ரணவ மந்த்ரத்தின் ப்ரயோகமே ஆகும். இதன் மூன்று வ்யாஹ்ருதிகளும் (பூ:, புவ:, ஸ்வ:) அதன் மூன்று அக்ஷரங்களிலிருந்து (அ, உ, ம) உண்டாகின்றன. அனைத்தயும் தூய்மையாக்கவல்ல ஸாவித்ரீ மந்த்ரமானது (இது “ஓம் தத் ஸ விதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோ ந: ப்ரசோதயாத்” என்னும் காயத்ரீ மந்த்ரமாகும்), இதன் பாதங்களிலிருந்து வெளிப்படுவதாகும்.

46. அஸ்யா: பத்படீயஸ்த்ரயோ வேதா ருக் யஜு: ஸாம லக்ஷணா:
இத்யேதந்மயம் ஏவேதம் லௌகிகம் வைதிகம் வச:

**பொருள்** – ஸாவித்ரி மந்த்ரத்தின் பாதங்களிலிருந்து மூன்று வேதங்களான ருக், யஜுர் மற்றும் ஸாமம் ஆகியவை வெளிப்படுகின்றன. ஆகவே இந்த உலகத்தில் பயன்படுத்தப்படும் சொற்களும், வேதங்களில் பயன்படுத்தப்படும் சொற்களும் இந்த ப்ரணவத்தையே கொண்டதாக உள்ளன.

47. யதா ந்யக்ரோத தாநாயாம் அந்தர்பூதோ மஹாத்ரும:

தேதம் வாங்மயம் விச்வம் அஸ்மிந் அந்த: ஸ்திதம் ஸதா

**பொருள்** – ஒரு ஆலமரத்தின் விதைக்குள் எவ்விதம் மிகவும் பெரிய ஆலமரம் அடங்கியுள்ளதோ அதே போன்று, இந்த விச்வத்தில் உள்ள அனைத்து சொற்களும் இந்த ப்ரணவத்தில் அடங்கியுள்ளன.

48. ஏதத் ஆத்யம் மஹாபீஜம் சப்தாநாம் ப்ரக்ருதி: பரா
சப்தப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் மஹத்

**பொருள்** – இத்தகைய ப்ரணவமே தொடக்கமாக உள்ள மஹாபீஜ மந்த்ரமாகும். இதுவே அனைத்து சப்தங்களுக்கும் ஆதாரமாகும். ஆகவே இது சப்தப்ரஹ்மமாகவே உள்ளது. இதுவே மிகவும் உயர்ந்ததும், மிகவும் தூய்மையானதும், உயர்ந்த தத்துவமும் ஆகும்.

49. ஓங்கார: ப்ரணவஸ்தாரோ ஹம்ஸோ நாராயணோ த்ருவ:
வேதாத்மா ஸர்வ வேதாதிராதித்ய: ஸர்வபாவந:
50. மோக்ஷதோ முக்திமார்கச்ச ஸர்வ ஸந்தாரணக்ஷம:
ஏவமாதீநி நாமாநி சாஸ்த்ரே சாஸ்த்ரே விசசணை:

**பொருள்** – ஓங்காரம், ப்ரணவம், தாரா, ஹம்ஸம், நாராயணா, த்ருவம், வேதாத்மா, ஸர்வவேதாதி, ஆதித்யன், ஸர்வபாவநம், மோக்ஷதா, முக்திமார்க்கம், ஸந்தாரணக்ஷம போன்ற பலவும் இதனை ("ஓம்" என்பதை) குறிப்பதற்காகப் பல சாஸ்த்ரங்களில் அனைத்தும் அறிந்தவர்களால் பயன்படுத்தப்படும் சொற்களாகும்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 280)

## சரணாகதி கத்யத்தின் சூர்ணை மூலமாக "ஸர்வபாப" என்பதை விளக்குதல்

**மூலம் –** இப்படி "ஸர்வபாபேப்ய:" என்கிற விரோதி வர்கத்தையெல்லாம் "மநோ வாக் காயை:" என்று தொடங்கி மூன்று சூர்ணிகையாலே சப்தமாகவும் ஆர்த்தமாகவும் அருளிச்செய்தார். "க்ஷபயித்வா அதிகாராந் ஸ்வாந் சச்வத் காலேந பூயஸா | வேதஸோ யத்ர மோதந்தே சங்கரா: ஸ புரந்தரா:" என்றும், "யாவததிகாரம் அவஸ்தித: ஆதிகாரிகாணாம்" என்றும் சொல்லுகிறபடியே சிலர்க்கு அதிகார அவஸாநத்திலே மோக்ஷமாயிருந்தது. அதிகாரிகளல்லாதார்க்கும் "அநாரப்த கார்யே ஏவ து பூர்வே ததவதே:" என்கிறபடியே ப்ராரப்த கர்ம போக அவஸாநத்திலேயாயிருந்தது. இப்படியிருக்க, இவ்விடத்தில் ஆரப்த கார்யத்தை க்ஷமிக்கையாவதென்னென்னில், பல ப்ரதாந ப்ரவ்ருத்தமான கர்மத்திலும் ஜந்மாந்தர திவஸாந்தர ஸ்தித்யாதிகளுக்கு ஆரம்பகமான அம்சமும் இஸ் ஸ்வதந்த்ர ப்ரபத்தி நிஷ்டனுக்கு அநிஷ்டமாய், அத்தையும் பற்ற இவன் சோகிக்கில் அவ்வம்சத்தையும் ஈச்வரன் க்ஷமிக்கும். அப்போதே மோக்ஷம் பெற்றன்றி தரிக்கமாட்டாத ஆர்த்தி அதிசமுடையார்க்கு, அக்ஷ்க்ஷணத்திலே ப்ராரப்த கார்யமான கர்மத்தை நிச்சேஷமாக க்ஷமிக்கும். ஆகையால் ஆரப்த கார்யத்தை க்ஷமிக்க வேண்டுமென்று அபேக்ஷிக்கக் குறையில்லை.

**விளக்கம் –** இவ்விதம் "ஸர்வபாபேப்ய:" என்பதன் மூலம் கூறப்பட்டதான "பகவானை அண்டவிடாமல் தடுக்கும் விரோதிகள்" அனைத்தையும்

எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில் (சூர்ணை 11) – மநோ வாக் காயை: - மனம், வாக்கு, சரீரம் – என்று தொடங்குகின்ற மூன்று சூர்ணைகளில் விரிவாக அருளிச்செய்தார். லக்ஷ்மீ தந்த்ரத்தில் (17) - ஏகாந்திநோ மாஹாபாகா யத்ர பச்யந்தி நௌ ஸதா க்ஷபயித்வாதிகாராந் ஸ்வாந் சச்வத்காலேந பூயஸா - நாராயணனை மட்டுமே வழிபட்டபடி உள்ள அவர்கள், இந்த இடத்தில் எப்போதும் எங்கள் இருவரையும் பார்த்துக் கொண்டு, தாங்கள் செய்த ப்ரபத்திக்கான பலன்களை அனுபவித்தபடி உள்ளனர் – என்றும், (18) - வேதஸோ யத்ர மோதந்தே சங்கரா: ஸ புரந்தரா: ஸூரயோ நித்ய ஸம்ஸித்தா: ஸர்வதா ஸர்வ தர்சிந: - அங்கு நான்முகன், சங்கரன், புரந்தரர்கள் (இந்த்ரன்கள் - ஒவ்வொரு கல்பத்திலும் இந்த்ரன் மாறுபாடுவதால், இதுவரை இருந்த இந்த்ரன்கள், இப்போது உள்ள இந்த்ரன்), தேவர்கள், எப்போதும் ஸித்தி பெற்ற ரிஷிகள் என்று பலரும் எப்போதும் உயர்ந்த விஷ்ணுவின் ரூபத்தைத் தரிசித்தபடி உள்ளனர் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஒரு சில அதிகாரங்களில் பகவானால் நியமிக்கப்பட்டவர்களுக்கு, அந்த அதிகாரத்தின் முடிவில் மட்டுமே மோக்ஷம் ஏற்படும். இவ்விதமான அதிகாரிகள் அல்லாதவர்களுக்கு, ப்ரஹ்ம ஸூத்ரம் (4-1-15) - அநாரப்த கார்யே ஏவ து பூர்வே ததவதே: - இதுவரை பலன் அளிக்கத் தொடங்காத புண்ணிய பாபங்கள் மட்டுமே அழிகின்றன; காலதாமதம் கூறப்படுவதால் ஆகும் – என்பதற்கு ஏற்ப, பலன் அளிக்கத் தொடங்கிய கர்மங்களை அனுபவித்த பின்னரே மோக்ஷம் உண்டாகும். இவ்விதம் உள்ளபோது இங்கு, “பலன் அளிக்கத் தொடங்கிய கர்மங்களையும் பகவான் பொறுக்கிறான்”, என்று கூறுவதன் கருத்து என்ன? ப்ரபந்நன் ஒருவன் தன்னுடைய பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்களில், அடுத்த பிறவி அல்லது அடுத்த நாளின் இருப்பு போன்றவற்றை அளிக்கவல்ல கர்ம பலன்கள் குறித்து விருப்பம் இன்றி துன்பம் அடைவானாகில், அத்தகைய கர்மங்களைப் பகவான் அப்போதே அழிக்கிறான். அந்த நொடியிலேயே மோக்ஷம் பெற்றால் அல்லாமல் உயிர் தரிக்கமாட்டாதவர்களான மிகுந்த துடிப்பு கொண்ட ப்ரபந்நர்களுக்கு, பலன் அளிக்கத் தொடங்கிவிட்ட கர்மங்களை, அந்த நொடியிலேயே அழிக்கிறான். ஆகவே பலன் அளிக்கத் தொடங்கிய கர்மங்களைப் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்புவதில் குறையில்லை.

**மூலம்** – இவ்விடத்தில், ப்ரபத்தி காலத்துக்கு முன்புள்ளவற்றை “க்ருதாந்” என்றெடுத்துப் பின்புள்ளவற்றை “கரிஷ்யமாணாந்” என்று சொல்லா நின்றது; ப்ரபத்தி காலத்தில் பண்ணுவன சில பாபங்கள் காண்கிறோம், இப்படியிருக்கக் க்ரியமாணங்களை க்ஷமிக்கையாவது ஏன் என்னில், “ப்ராரப்தோபரி ஸமாப்தச்ச வர்த்தமாந:” என்கிற ப்ரக்ரியையாலே ப்ரபத்திக்கு முன்பே தொடங்கிப் பின்பே தலைக்கட்ட வேண்டும்படி சிரகால ஸாத்யமாயிருக்குமவற்றையும் தத்க்ஷணத்தில் ப்ராமாதிகங்களையும் இங்கு க்ரியமாணங்களென்கிறது. கரிஷ்யமாணங்களாவன பின்பு தொடங்குமவை. இப்படி க்ரியமாண ஏகதேசங்களாயும், கரிஷ்யமாணங்களாயுமுள்ள உத்தராகத்தில் புத்தி பூர்வகமல்லாதவை, ஈச்வரன் க்ஷமிக்க ச்லேஷியாதே போம். புத்தி பூர்வகங்களானவை ப்ரபந்நனுக்கு “ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்” என்கையாலே புந: ப்ரபத்தியாலே சமிக்கும்.

**விளக்கம்** – எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில், “க்ருதாந்” என்னும் சொல் மூலம் ப்ரபத்திக்கு முன்பு செய்த பாபங்களையும், “கரிஷ்யமாணாந்” என்னும் சொல் மூலம் ப்ரபத்திக்குப் பின்னர் செய்யக்கூடும் என்னும் பாபங்களையும் உரைத்தார். ஆனால் இங்கு ப்ரபத்தி நேரத்தில் செய்யக்கூடிய பாபங்களை நாம் பொதுவாகக் காண்பதில்லை; இவ்விதம் உள்ளபோது இங்கு “க்ரியமாணாந்” என்று நிகழ்காலத்தில் உள்ளதாகக் கூறி, அதனைப் பொறுக்கவேண்டும் என்று உரைப்பதன் கருத்து என்ன? அதாவது, ப்ராரப்தோபரி ஸமாப்தச்ச வர்த்தமாந: - தொடங்கப்பட்டு முடிவடையாமல் இருப்பதே வர்த்தமாநம் ஆகும் – என்று கூறுவதற்கு ஏற்ப, ப்ரபத்திக்கு முன்பு செய்யத் தொடங்கப்பட்டு, அவற்றை முடிப்பதற்கு நீண்ட காலம் ஆகும்விதமாக, அஜாக்ரதையின் விளைவால் ப்ரபத்தியின்போதும் செய்வதாக உள்ள பாப கர்மங்களே “க்ரியமாணங்கள்” எனப்படுகின்றன. “கரிஷ்யமாணாந்” என்பது ப்ரபத்திக்குப் பின்னர் செய்யப்படும் பாபங்கள் ஆகும். இவ்விதம் உள்ளபோது ப்ரபத்திக்குப் பின்னர் செய்யப்படும் பாபங்களிலும், முன்பு தொடங்கப்பட்டு ப்ரபத்தி காலத்தில் செய்யப்படும் பாபங்களிலும், எவை புத்தி அறிந்து செய்யப்படாதவையோ, அவை அனைத்தும் ஈச்வரனால் பொறுக்கப்பட்டு, மீதம் ஏதும் இல்லாமல் அழிந்துவிடும். ப்ரபத்திக்குப் பின்னர் புத்தி அறிந்து செய்யப்படும் பாபங்கள், லக்ஷ்மீ தந்த்ரம் (17-91) -

ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத் – பாபங்களுக்கான ப்ராயச்சித்தம் செய்யப்படவேண்டும், அத்தகைய ப்ராயச்சித்தமானது மீண்டும் ப்ரபத்தி செய்வதே ஆகும் – என்பதற்கு ஏற்ப மீண்டும் ப்ரபத்தி செய்வதால் தள்ளப்படும்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த

# ஆசார்ய ஹ்ருதயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 100)

223. [1] ஆவாவென்று தானே தன்னடியார்க்குச் செய்யும் தொல்லருளென்று பரத்வாதிகளையுடையவன் எவ்விடத்தானென்னும் பாவியர்க்கும் இருகரையுமழிக்கும் க்ருபா ப்ரவாஹமுடையவன் பொய்கூத்து வஞ்சக்களவு தவிர முற்றவுந்தானாய் உன்னை விட்டென்னப் பண்ணின விரக்தி பல பரமாத்ம ராகம், [2] பேரமர் பின்னின்று கழியமிக்கு யானேயென்ன வாய்ந்து ஆற்றகில்லாது நீராய் மெலிய ஊடு புக்கு வளர, [3] விஷ வ்ருக்ஷ பலங்கள் கைகூடினவர் அடிமை புக்காரையும் ஆட்செய்வாரையுங் காண லோக த்வீபாந்தரங்களில் நின்றும் போந்த தேவர் குழாங்களைக் கண்டு காப்பிட்டு, ப்ரஹ்லாத விபீஷணர் சொற்கேளாத அரக்கரசுரர் போல்வாரைத் தடவிப் பிடித்து, [4] தேச கால தோஷம் போக எங்குமிடங் கொண்டவர்களை மேவித் தொழுது உஜ்ஜீவியுங்கோள், நீங்கள் நிறுத்துகிறவர்களை தேவதைகளாக நிறுத்தினவனை, [5] மேவிப் பரம்புமவரோடொக்கத் தொழில் யுக தோஷமில்லையாமென்று விஷ்ணுபக்தி பரராக்கிக் கண்ணுக்கினியன காட்டலாம்படியானார். கண்ணிலே நோக்கிக் காணும் பக்தி ஸித்தாஞ்ஜனத்தை யிடுகிறார் அஞ்சாம்பத்தில்.

**அவதாரிகை -** அஞ்சாம்பத்தால், கீழ்ச் சொன்ன பரத்வாதிகளால் வந்த தன்னுடைய உத்கர்ஷத்தையும், தந்தாமுடைய நிகர்ஷத்தையு மநுஸந்தித்து அகல்வாரளவிலும் மேல் விழுந்து விஷயீகரிக்கும்படி பரமகாருணிகனான ஸர்வேச்வரன், கீழிவர்க்குப் பிறப்பித்த விரக்திக்கு பலமான ஸ்வவிஷய பக்தியை பரம்பரயா அபிவ்ருத்தமாக்கி அந்த பக்தியையும் பாகவத ஸமாகமத்தையுமுடையரானவிவர் தாம் திருத்தத்

திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களையும், திருத்தின தம்மையும் காண்கைக்கு வந்த நித்யஸூரிகளையும் ச்வேத த்வீப வாஸிகளான ஸித்தரையுங் கண்டு மங்களாசாஸநம் பண்ணி, திருந்தாத அஸுர ராக்ஷஸ ப்ரக்ருதிகளையும் பகவத் பாகவத வைபவத்தை யுபதேசித்துத் திருத்தி பாகவத ஸமாஜ தர்சநமினிதாம்படியான ஜ்ஞாநம் பிறந்தார்க்கு ப்ராப்ய த்வரைக்கடியான பக்தியையு முபதேசித்துத் தலைகட்டுகிறாரென்கிறார்.

**விளக்கம் -** இதுவரை கூறப்பட்டவற்றில் உரைத்த பரத்வம் போன்ற பலவற்றாலும் வெளிப்படுத்தப்பட்ட ஸர்வேச்வரனாகிய தன்னுடைய உயர்வு மற்றும் தங்களுடைய தாழ்வு ஆகியவற்றை எண்ணியவர்களாக, ஸர்வேச்வரனாகிய தன்னை விட்டு அகன்று செல்ல முயல்பவர்கள் மீது விழுந்து அவர்களை ஏற்றுக்கொள்ளும் ஸர்வேச்வரன், கடந்த பத்தில் நம்மாழ்வாருக்கு ஏற்பட்ட விரக்தியின் பலனாக தன்னைக் குறித்த பக்தியானது அவருக்கு மேன்மேலும் வளரும்படிச் செய்தான். அப்படிப்பட்ட பக்தியையும், பாகவதர்களுடைய கூட்டத்தையும் கொண்டவராகிய நம்மாழ்வார், தான் திருத்தியதன் விளைவாகத் திருந்திய ஸ்ரீவைஷ்ணவர்களையும், இவ்விதமாகத் திருத்திய தன்னையும் காணபதற்காக வந்த நித்யஸூரிகளையும், ச்வேத த்வீபத்தில் வசிப்பவர்களாகிய ஸித்தர்களையும் கண்டு, அவர்களுக்கு மங்களாசாஸநம் செய்தார். இவ்விதம் திருத்தியபோதும் திருந்தாத அஸுரர்கள் மற்றும் ராக்ஷஸர்கள் ஆகியவர்களை உபதேசித்துத் திருத்தி, பாகவதர்களுடன் சேர்ந்து இருந்தல் என்பதை இனிமையாகக் காணும்படியாக உள்ள ஞானம் பிறந்தவர்களுக்கு, "பெறுகின்ற பேற்றை விரைவாக அடையவேண்டும்" என்ற பதற்றத்திற்குக் காரணமாக உள்ள பக்தியையும் உபதேசித்து ஐந்நாம் பத்தை நிறைவு செய்கிறார்.

**வ்யாக்யானம் -** [1] (ஆவாவென்று தானே தன்னடியார்க்குச் செய்யும் தொல்லருளென்று பரத்வாதிகளை யுடையவனெவ்விடத்தானென்னும் பாவியர்க்கு மிருகரையும் அழிக்கும் க்ருபா ப்ரவாஹமுடையவன்) "ஆவாவென்றருள் செய்து" என்று ஐயோ ஐயோ என்று என் பக்கலிலே க்ருபையைப் பண்ணியென்றும், "தானே யின்னருள் செய்து" என்று நான் அர்த்தியாதிருக்கத் தானே தன் பேறாக க்ருபை பண்ணியென்றும், "கலியுகமொன்று மின்றிக்கே தன்னடியார்க்கருள்

செய்யும்” என்று தன்பக்கலிலே ந்யஸ்த பரரானவர்களுக்கு கலிதோஷங்களொன்றும் வாராதபடியாக க்ருபை பண்ணுமென்றும், “பெருமானது தொல்லருளே” என்று ஸர்வேச்வரனுடைய ஸ்வாபாவிக க்ருபையென்றுஞ் சொல்லுகிறபடியே, “அம்மானாழிப்பிரானவனெவ்விடத்தான் யானார் எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும் கண்டீர்” என்று “கையும் திருவாழியுமானவழகை நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டு அங்குள்ளாருடனே பரிமாறியிருக்கிற ஸர்வேச்வரனானவன் எவ்வளவிலே! நித்ய ஸம்ஸாரிகளுக்கு மிவ்வருக்கான நான் எவ்வளவிலே!” என்று கீழ்ச் சொன்ன தன்னுடைய பரத்வ காரணத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வாதிகளால் வந்த உத்கர்ஷத்தையும் தங்களுடைய நிகர்ஷத்தையும் அநுஸந்தித்து அகலும்படி யெத்தனையேனும் மஹாபாபிகளளவிலும், கர்மாநுகுண நிர்வாஹத்துக்குடலான தன் நிரங்குச ஸ்வாதந்த்ர்யமாகிற கரையும், தன்னநுக்ரஹம் தங்கள் பக்கல் வாராதபடி அபராதங்களையே பண்ணுமிவர்கள் ஔபாதிக ஸ்வாதந்த்ர்யமாகிற கரையும் அழியப் பெருகா நிற்குமான க்ருபா ப்ரவாஹத்தையுடைய ஸர்வேச்வரன், (பொய் கூத்து வஞ்சக்களவு தவிர) “பொய்யே கைம்மை சொல்லி”, “என்றென்றே சில கூத்துச் சொல்ல”, “உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனந் தவிர்ந்தே” என்று மெய்கலவாத பெரும்பொய்யைச் சொல்லி, ப்ரேம பரவசரைப் போலே பாவித்து, ஹ்ருதயம் ப்ராக்ருத விஷய ப்ரவணமாயிருக்க, அநந்ய ப்ரயோஜநரைப்போலே உன் ஔதார்யத்தையும் வடிவழகையும் ஸஹ்ருதயமாகச் சொல்லுகிறாரென்று தோன்றும்படி பலகாலுஞ் சொல்லா நின்று கொண்டு, ஸர்வஜ்ஞனானவுன்னையும் பகட்டும் க்ருத்ரிம யுக்தமான மனஸ்ஸைத் தவிர்ந்தென்று அவற்றை இவர் தவிரும்படி. (முற்றவும் தானாய் உன்னை விட்டென்னப் பண்ணின விரக்தி பல பரமாத்ம ராகம்) “என்னை முற்றவும் தானானான்” என்று இவர்க்கு ஸர்வவித போக்யமும் தானாய், “இனியுன்னை விட்டென் கொள்வனே” என்று நான் விட்டவன்றும் விடமாட்டாத வுன்னை யொழிய துராராதமாய், வருந்தியாராதித்தாலும் கிடைப்பதொன்றில்லாத விஷயங்களைப் பற்றவோவென்று இவர் தாமே பேசும்படி பண்ணின “கண்ட சதிர் கண்டொழிந்தேன்” என்கிறபடியே அவன் போக்யதையாலே அந்ய விஷயங்களையடைய வுபேக்ஷிக்கும்படி கீழில் பத்தில் பிறந்த விரக்திக்கு பலமான “பரமாத்மநி யோ ரக்த:” என்கிற பரமாத்ம விஷயத்தில் ராகமானது.

**விளக்கம்** - (ஆஆ என்று) – திருவாய்மொழி (5-1-9) - ஆ ஆ என்றருள் செய்து - என்பதற்கு ஏற்ப “ஐயோ ஐயோ” என்று பதறியபடி என்னிடம் க்ருபை செய்து என்றும், (தானே) - திருவாய்மொழி (5-1-10) – தானே இன்னருள் செய்து - என்பதற்கு ஏற்ப நான் விண்ணப்பம் செய்யாமல் இருந்தபோதிலும் தானே தனது பேறு என்று எண்ணி எனக்கு க்ருபை செய்து என்றும், (தன் அடியார்க்குச் செய்யும்) – திருவாய்மொழி (5-2-11) - கலியுகம் ஒன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள் செய்யும் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனாகிய தன்னிடம் தங்களுடைய பாரங்கள் அனைத்தையும் வைத்தவர்களுக்கு கலியின் தோஷங்கள் ஏதும் வராதபடியாக க்ருபை செய்த என்றும், (தொல் அருள் என்று) - திருவாய்மொழி (5-9-9) - பெருமானது தொல்லருளே – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய இயல்பாகவே அமைந்த க்ருபை என்றும் பலவிதமாகக் கூறுவதற்கு ஏற்ப, (பரத்வாதிகளை யுடையவனெவ்விடத்தானென்னும் பாவியர்க்கும்) - திருவாய்மொழி (5-1-7) - அம்மானாழிப்பிரானவனெவ்விடத்தான் யானார் எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்கும் கண்டீர் - என்பதற்கு ஏற்ப, “திருக்கரமும் திருச்சக்கரமும் என்றுள்ள அழகை நித்யஸூரிகளுக்குக் காட்சி அளித்தபடி அங்குள்ள அனைவருடன் சேர்ந்து நிற்கின்ற ஸர்வேச்வரன் எத்தகையவன்! நித்யமான ஸம்ஸாரிகளுக்கு அருகில் எப்போதும் உள்ள நான் எத்தகையவன்!” என்பதாக இதுவரை உள்ள பத்துக்களில் கூறப்பட்ட ஸர்வேச்வரனாகிய தன்னுடைய பரத்வம், அனைத்திற்கும் காரணமாக உள்ள தன்மை, அனைத்திலும் வ்யாபித்துள்ள தன்மை, அனைத்தையும் நியமித்தபடி உள்ள தன்மை போன்ற பலவற்றால் தனக்கு உள்ள உயர்வினையும், ஸம்ஸாரிகளாகிய தங்களுடைய தாழ்வையும் எண்ணியபடி அகல்பவர்களாக எத்தனை மஹாபாபிகளாக உள்ளபோதிலும். (இருகரையும் அழிக்கும் க்ருபா ப்ரவாஹ முடையவன்) - ஸம்ஸாரிகளுடைய கர்மங்களுக்கு ஏற்றபடியாக அவர்களை நடத்துவதாக உள்ளதான தடையற்ற தனது சுதந்திரம் என்ற கரையும், ஸர்வேச்வரனுடைய க்ருபையானது தங்களை அண்டாதபடி அபராதங்களை மட்டும் செய்பவர்களுடைய செருக்கு என்பதற்குக் காரணமாக உள்ள “சுதந்திரமாக எண்ணுதல்” என்ற கரையும் அழியும்படியாகப் பெருகி வருகின்ற க்ருபை என்ற வெள்ளத்தைக் கொண்ட ஸர்வேச்வரன். (பொய் கூத்து வஞ்சக்களவு தவிர) -

திருவாய்மொழி (5-1-1) – பொய்யே கைம்மை சொல்லி - என்றும், திருவாய்மொழி (5-1-2) - என்றென்றே சில கூத்துச் சொல்ல – என்றும், திருவாய்மொழி (5-1-3) - உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனந் தவிர்ந்தே – என்றும் கூறுவதற்கு ஏற்ப உண்மை என்பது சிறிதும் இல்லாதபடி பெரும் பொய்யை மட்டுமே உரைத்து, ப்ரேமை காரணமாகப் பரவசம் அடைந்தவர்கள் போன்று பாவித்து, உள்ளமானது எப்போதும் இந்த உலகியல் பொருள்களில் மட்டுமே ஈடுபாட்டுடன் இருக்க, உன்னை அல்லாமல் வேறு எந்தப் பயனையும் எண்ணாமல் உள்ளவர்கள் போன்று, உன்னுடைய ஔதார்யத்தையும், வடிவழகையும் ஆழ்ந்த உள்ளன்புடன் உரைக்கிறார்கள் என்பது வெளிப்படும்படியாகப் பலமுறை உரைத்தபடி நின்று, அனைத்தும் அறிந்தவனாகிய உன்னையும் பகட்டும் கள்ள மனத்தினைத் தவிர்ந்து என்று அவற்றை இவர் தவிரும்படியாக. (முற்றவும் தானாய்) – திருவாய்மொழி (5-1-10) – என்னை முற்றவும் தானானான் - என்று கூறுவதற்கு ஏற்ப நம்மாழ்வாராகிய இவருக்கு அனைத்துவிதமான இன்பம் அளிக்கின்ற பொருள்களும் தானே என்று, (உன்னை விட்டு என்னைப் பண்ணின) - திருவாய்மொழி (5-1-3) – இனியுன்னை விட்டென் கொள்வனே - என்பதற்கு ஏற்ப நான் விட்டாலும் கூட என்னை விடாமல் இருந்த உன்னைத் தவிர்த்து வருந்தி ஆராடதிக்கத் தக்கதாக; அதாவது வருந்தி ஆராதித்தாலும் அதன் மூலம் கிட்டவல்ல பயன் ஏதும் இல்லாத மற்ற விஷயங்களைப் பற்றவேண்டுமோ என்று இவர் தாமே உரைக்கும் விதமாகச் செய்த. (விரக்தி பலம்) - திருவாய்மொழி (4-9-10) - கண்ட சதிர் கண்டொழிந்தேன் - என்பதற்கு ஏற்ப அவனுடைய இனிமை காரணமாக மற்ற விஷயங்கள் அனைத்தையும் தவிர்க்கும்படியாகக் கடந்த பத்தில் ஏற்பட்ட விரக்தியின் பலனாக. (பரமாத்ம ராகம்) – பரமாத்மநி யோ ரக்த: - யார் ஒருவன் பரமாத்மாவிடம் மிகுந்த பக்தி கொண்டவனாக - என்பதாக உள்ள பரமாத்மா விஷயத்தில் ஏற்பட்ட விருப்பம் என்பது.

**வ்யாக்யானம்** - [2] (பேரமர் பின்னின்று கழியமிக்கு யானே யென்னவாய்ந்தாற்றகில்லாது நீராய் மெலியவூடு புக்கு வளர) "பேரமர் காதல்" என்று அபரிச்சேத்யமாய்ப் பொருந்தி, "பின்னின்ற காதல் நோய் நெஞ்சம் பெரிதடும்" என்று பிடரிபிடித்து நின்று நெஞ்சை முடிக்கும்படியாய், "கழியமிக்கதோர் காதல்" என்று பார்ச்வஸ்த்தர்க்குப் பேசும்படி மிகவும் கைகழிந்து,

“கடல் ஞாலம் செய்தேனும் யானே” என்று தொடங்கி, “வாய்ந்த வழுதி வளநாடன்” என்று அவனுடைய ஜகத்காரணத்வாதி அத்புத கர்மங்களை நானே செய்தேனென்று அநுகார முகத்தாலே விஷயத்தைக் கிட்டிப் பேசும்படியாய், “உன்னை விட்டொன்று மாற்றகிற்கின்றிலேன்” என்று அவனையொழிய ஒரு க்ஷணமும் தரித்திருக்க மாட்டாதபடியாய், “ஆராவமுதே யடியேனுடலம் நின்பாலன்பாயே நீராய்” என்று விஷய போக்யதாதிசயத்தால் வந்த ப்ராவண்யத்தாலே ஜ்ஞாநாச்ரயமான ஆத்மாவாதல் ஜ்ஞாந ப்ரஸரண த்வாரமான மனஸ்ஸாதலன்றிக்கே ஆத்மாவுக்கு ஆயதநமான சரீரமும் சிதிலமாம்படியாய், “வைகலும் வினையேன் மெலிய” என்று அந்த சைதில்யந்தான் காதாசித்கமன்றிக்கே ஸர்வகாலமும் மெலியும்படியாய், “நிறந்தனூடு புக்கெனதாவியை நின்று நின்றுருக்கி யுண்கின்ற” என்று பகவத்குணங்கள் மர்மத்திலே புகுந்து ஆத்மாவை யிடைவிடாமல் த்ரவ த்ரவ்யமாக்கும்படி அபிவ்ருத்தமாக.

**விளக்கம்** - (பேரமர்) - திருவாய்மொழி (5-3-3) – பேரமர் காதல் - என்பதற்கு ஏற்ப அளவிட இயலாதபடியாகப் பொருந்தி. (பின்னின்று) - திருவாய்மொழி (5-4-6) - பின்னின்ற காதல் நோய் நெஞ்சம் பெரிதடும் - என்பதற்கு ஏற்ப பிடரியைப் பிடித்து நின்று உள்ளத்தை முடிக்கும்விதமாக. (கழியமிக்கு) - திருவாய்மொழி (5-5-10) – கழியமிக்கதோர் காதல் – என்பதற்கு ஏற்ப அருகில் உள்ள அனைவரும் பேசும்படியாக மிகவும் கை கழிந்து. (யானே என்னவாய்ந்து) - திருவாய்மொழி (5-6-1) - கடல் ஞாலம் செய்தேனும் யானே - என்று தொடங்கி, திருவாய்மொழி (5-6-1) - வாய்ந்த வழுதி வளநாடன் - என்று முடிவதாக உள்ள பாசுரங்களில் அவனுடையதாக உள்ள ஜகத்காரணம் போன்ற வியக்கவைக்கும் செயல்களை நானே செய்தேன் என்று உரைக்கும்படியாக. (ஆற்றகில்லாது) - திருவாய்மொழி (5-7) – ஆராவமுதே யடியேனுடலம் நின்பாலன்பாயே நீராய் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய் இனிமையின் மிகுதியால் விளைந்த ப்ரேமையால் ஞானத்திற்கு ஆதாரமாக உள்ள ஆத்மாவும், ஞானம் வெளிப்படும் வழியாக உள்ள மனமும் அழியும்படியாக. (மெலிய) – திருவாய்மொழி (5-9) – வைகலும் வினையேன் மெலிய - என்பதற்கு ஏற்ப சரீரத்தில் அத்தகைய நிலை குலைதல் என்பது ஒரு காலகட்டத்தில் மட்டுமே என்பதாக இன்றி அனைத்து காலங்களிலும்.

(ஊடு புக்கு வளர) - திருவாய்மொழி (5-10) - நிறந்தனூடு புக்கெனதாவியை நின்று நின்றுருக்கி யுண்கின்ற - என்பதற்கு ஏற்ப பகவானுடைய குணங்கள் அனைத்தும் உட்புகுந்து ஆத்மாவை இடைவிடாமல் நீர்ப்பண்டம் போன்று உருக்கும்விதத்தில் வளர.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 245)

3-10-2 குறைவில் தடங்கடல் கோளரவேறி தன் கோலச் செந்தாமரைக்கண்
உரைபவன் போலவோர் யோகு புணர்ந்த ஒளிமணி வண்ணன் கண்ணன்
கறையணி மூக்குடைப் புள்ளிக் கடாவி அசுரரைக் காய்ந்தவம்மான்
நிறைபுகழேத்தியும் பாடியுமாடியும் யானொரு முட்டிலனே

**பொருள் –** தனது சேர்த்தி காரணமாகப் பரிபூர்ணமாகவும், தான் கண்வளர்வதற்கு மிகுந்த இடம் கொண்டதாகவும் உள்ள ஸமுத்திரத்தில், வலிமை நிறைந்த ஆதிசேஷன் மீது ஏறி, தனது ஈச்வரத்தன்மையை மறைமுகமாக வெளிப்படுத்தும் அழகு கொண்டதாகவும் சிவந்த தாமரை போன்றதும் ஆகிய திருக்கண்கள் மலரும்படியாக உறங்குவது போன்றுள்ள ஒப்பற்ற யோகத்துடன் கூடியவனும், நீலமணி போன்ற மிகுந்த ஒளி கொண்ட திருமேனி கொண்டவனும் ஆகிய ஸர்வேச்வரன், க்ருஷ்ணனாக வந்து அவதரித்து, கறையுடன் கூடிய மூக்கு கொண்ட கருடனை வழி நடத்தி, அசுரர்கள் அனைவரையும் அழித்தான். இவ்விதம் அனைத்தையும் ஆள்கின்ற அவனுடைய பரிபூர்ணமான புகழை, மிகுந்த ப்ரீதி கொண்டவனாகத் துதித்தும், இசையுடன் சேர்த்துப் பாடியும், மகிழ்வால் நடனம் ஆடியும் வாழ்கின்ற நான், எந்த ஒரு குறையும் கொண்டவன் அல்லன்.

**அவதாரிகை -** முதற்பாட்டில் திருவவதாரங்களைச் சொன்னார். இதில் திருவவதார கந்தமாகத் திருப்பாற்கடலிலே கண் வளர்ந்து அங்கு நின்றும் ஶ்ரீவஸுதேவ குமாரனாய் வந்து திருவாதாரம் பண்ணி ஆச்ரித விரோதிகளை அழியச் செய்த க்ருஷ்ணனுடைய புகழைப் பேசப் பெற்ற எனக்கு ஒரு தட்டில்லை என்கிறார்.

**விளக்கம் -** முதல் பாசுரத்தில் அவனுடைய திருஅவதாரங்களை உரைத்தார். இந்தப் பாசுரத்தில், "திருஅவதாரத்திற்குக் காரணமாகத் திருப்பாற்கடலில் கண் வளர்ந்து, அங்கிருந்து புறப்பட்டு ஶ்ரீவஸுதேவருடைய குமாரனாக இங்கு வந்து அவதாரம் செய்து, தனது அடியார்களுடைய விரோதிகள் அனைவரையும் அழியும்படிச் செய்த க்ருஷ்ணனுடைய புகழை உரைத்தபடி உள்ள எனக்கு எந்தத் குறையும் இல்லை", என்கிறார்.

**வ்யாக்யானம் -** (குறைவில் தடங்கடல்) நானேயன்று, என்னிலும் குறைவற்றாருண்டு. "தடங்கடல்" என்னா நிற்கச்செய்தே, "குறைவில் தடங்கடல்" என்றது, "திருமேனி நீ தீண்டப் பெற்று மாலும் கருங்கடலே என்னோற்றாய்" என்னுமாபோலே, அவனோட்டை ஸ்பர்ச ஸுகத்தாலே குறைவற்றிருக்கை. யசோதைப்பிராட்டி க்ருஷ்ணனைத் தன் மடியிலே வளர்த்தி உகக்குமாபோலே, ஸர்வேச்வரனைத் தன்னுள்ளேயிட்டுக் கொண்டு அத்தாலே உகந்து குறைவற்றிருக்கை. (தடங்கல்) அஸங்குசிதமாகக் கண்வளர்ந் தருளும்படி இடமுடைய்த்தான கடல்.

**விளக்கம் -** (குறைவில் தடங்கடல்) - நான் மட்டும் அல்ல, அவனுடைய திருமேனியால் தீண்டப்பட்டு அதன் காரணமாகக் குறைவு அற்றவர்கள் பலரும் உள்ளனர். "தடங்கல் - பெரிய கடல்" என்று கூறினாலே போதுமானதாக உள்ளபோது "குறைவில் தடங்கல்" என்று ஏன் கூறவேண்டும்? இதற்கு விடை அளிக்கிறார். முதல்திருவந்தாதி (19) - திருமேனி நீ தீண்டப் பெற்று மாலும் கருங்கடலே என்னோற்றாய் – அவனுடைய திருமேனியைத் தீண்டப் பெற்றதன் விளைவாக மயங்கி நிற்கும் கறுத்த கடலே, இந்தப் பேறு பெற நீ என்ன நோன்பு நோற்றாய் - என்பதற்கு ஏற்ப, அவனுடைய ஸம்பந்தம் காரணமாக ஏற்பட்ட சுகத்தால் குறைவின்றி இருந்தல் என்பதைக் கூறுவதற்காக ஆகும். யசோதை,

தனது மடியில் க்ருஷ்ணனை வளர்த்து மகிழ்வது போன்று, ஸர்வேச்வரனைத் தன்னுள்ளே வைத்துக்கொண்டு அதன் காரணமாக மகிழ்வதால் குறைவின்றி இருத்தல் (தடங்கடல்) - சுருக்கம் இன்றி அவன் கண்வளர்வதற்கு ஏற்ப இடம் கொண்ட கடல்.

**வ்யாக்யானம்** - (கோளரவு ஏறி) கோளென்று ஒளியாய், திருமேனியோட்டை ஸ்பர்சத்தாலே நிரவதிக தேஜஸ்ஸையுடையனான திருவநந்தாழ்வான் மேலே ஏறி யென்னுதல்; அன்றிக்கே, கோளென்று மிடுக்காய், "ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பலைகதாமநி" என்கிறபடியே ஸர்வேச்வரனும் ஸர்வேச்வரியுங் கூடித் துகையா நின்றால் பொறுக்கைக்கு ஈடான தாரண ஸாமர்த்யத்தை யுடையனா யிருக்குமென்னுதல். (அரவு) மென்மை, குளிர்த்தி, நாற்றம் இவற்றை ப்ரக்ருதியாகவுடையனா யிருக்கை.

**விளக்கம்** - (கோள் அரவு ஏறி) - கோள் என்பது ஒளி; திருமேனியின் தீண்டுதல் காரணமாக எல்லையற்ற தேஜஸ் கொண்ட ஆதிசேஷன் மீது ஏறி. அல்லது கோள் என்பதற்கு மிடுக்கு என்றும் பொருள் கூறலாம்; ஸ்தோத்ரரத்னத்தில் - ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பலைகதாமநி – உயர்ந்த ஞானம் மற்றும் பலத்துக்கு இருப்பிடமாக உள்ள ஆதிசேஷன் என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனும் ஸர்வேச்வரியும் சேர்ந்து நின்று துகைத்தால் கூடப் பொறுத்துக் கொள்வதற்கு ஏற்றபடியான ஆற்றல் கொண்ட ஆதிசேஷன். (அரவு) - மென்மை, குளிர்ச்சி, நாற்றம் ஆகிய அனைத்தையும் தனது இயல்பாகவே கொண்டுள்ளவன்.

**வ்யாக்யானம்** - (தன் இத்யாதி) வெறும் புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படியாய், ஸர்வைச்வர்ய ஸூசகமாய், பெரியபிராட்டியாரோட்டைக் கலவியாலே வந்த ஆநந்த ஸூசகமாய், அப்போதலர்ந்த செவ்வித்தாமரையை ஒருபமை சொல்லலாம்படி அழகியதாய்ச் சிவந்திருந்துள்ள திருக்கண்கள். உறைகை – உறங்குகை, கண்ணுறைகை - கண் வளர்ந்தருளுகை; கண்வளருகையென்று பேராய் ஜகத் ரக்ஷண சிந்தாயுக்தனாகை. (ஓர் யோகு புணர்ந்த) "ஸகல ப்ராணிகளும் நம்மைக் கிட்டிக் கரைமரஞ் சேர்ந்ததாம் விரகேதோ!" என்று இவற்றினுடைய ரக்ஷணோபாயச் சிந்தை பண்ணினால் அவ்வநுஸந்தாநம்

பொறாமையாலே நாக்கு உலரும்; அப்போது கர்ப்பூரநிகரம் வாயிலே யிடுவாரைப்போலே, "ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந்" என்று தன்னைத்தானே அநுஸந்தியா நிற்கும். இப்படி அநுஸந்தித்தவாறே ரக்ஷணோபாயம் தோற்றுமே.

**விளக்கம்** - (தன் இத்யாதி) - ஒரு ஒப்பனை காரணமாக ஏற்பட்ட அழகுக்கு அல்லாமல், இயல்பாகவே உள்ள அழகுக்கு ஆலத்தி வழிக்க வேண்டும்படியாகவும், அனைத்தையும் தனது ஐச்வர்யமாகக் கொண்டவன் என்பதை மறைமுகமாக வெளிப்படுத்தும்படியாகவும், பெரியபிராட்டியாருடன் சேர்ந்த நிலை காரணமாக உண்டாகின்ற ஆனந்தத்தை வெளிப்படுத்துவதாகவும், அப்போது மலர்ந்த தாமரைமலரை உவமையாகக் கூறலாம்படி அழகாகச் சிவந்ததாகவும் உள்ள திருக்கண்கள். உறைகை என்றால் உறங்குகை என்று பொருள்; கண் உறைகை என்றால் கண் வளர்தல்; அதாவது கண்வளர்தல் என்று கூறிக் கொண்டு இந்த ஜகத்தை எவ்விதம் காப்பாற்றுவது என்று சிந்தனையுடன் உள்ள நிலை. அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். "அனைத்து ஜீவராசிகளும் நம்மை அடைந்து கரையேற வழி என்னவோ?", என்ற இவற்றைக் காப்பாற்றவேண்டும் என்னும் தொடர் எண்ணம் காரணமாக பொறுத்துக் கொள்ள இயலாமல் நாக்கு உலர்கிறது; அப்போது கர்ப்பூரத்தினை வாயில் இடுபவர்கள் போன்று ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-4-6) ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந் - வாசுதேவனாகிய தன்னைச் சிந்தித்தபடி - என்பதற்கு எற்ப, தன்னைத்தானே எண்ணியபடி இருப்பான்; இவ்விதம் எண்ணும்போது, எவ்விதம் ரக்ஷிக்கலாம் என்ற உபாயம் அவனுக்குத் தென்படும்.

**வ்யாக்யானம்** - (ஒளி மணிவண்ணன் கண்ணன்) ரக்ஷ்யவர்க்கத்தைத் தன் வடிவழகாலே கரைமரஞ் சேர்க்கைக்காக க்ருஷ்ணனாய் வந்து அவதரித்தவன். "ஆட்கொள்ளத் தோன்றிய ஆயர்தங்கோ"இறே ஒளியையுடைய நீலமணி போலேயிருக்கிற வடிவையுடைய க்ருஷ்ணன். (கறையணி இத்யாதி) ப்ரதிபக்ஷத்தைக் கண்டு கறை கழுவ அவஸரமின்றிக்கே யிருக்கையாலே, கறையேறி அதுவே ஆபரணமாயிருக்கும் மூக்கு என்னுதல்; அன்றிக்கே, தாயார் "புத்ர முகங் காணவேணும்" என்னும் அபிநிவேசத்தாலே முட்டையாயிருக்கிற

பருவத்திலே ஒரு உத்யோகத்தைப் பண்ணினாளாய், அத்தால் ஓரடையாளம் பிறந்து, அதுதான் எம்பெருமானுக்கு ஸ்ரீவத்ஸத்தோபாதியாய், அத்தை ஆபரணமாகவுடைய புள் என்றுமாம். (கடாவி) ரதாதிகளை நடத்துமாபோலே திருமேனியோட்டை ஸ்பர்சத்தாலே திமிர்ந்து, வடிம்பிட்டுத் தாக்கி நடத்த வேண்டியிருக்கிறபடி. “த்வதங்க்ரி ஸம்மர்த்த கிணாங்க சோபிநா” என்னக்கடவதிறே.

**விளக்கம்** - (ஒளி மணிவண்ணன் கண்ணன்) - தன்னால் காப்பாற்றப்பட வேண்டியவர்களைத் தனது வடிவழகு மூலமாகக் கரையேற்றுவதற்காக க்ருஷ்ணனாக வந்து அவதரித்தவன். இதற்கான ப்ரமாணம் பெரியதிருமொழி (1-6-11) - ஆட்கொள்ளத் தோன்றிய ஆயர்தங்கோ – என்பதாகும். இப்படிப்பட்ட ஒளி பொருந்திய நீலமணி போன்ற வடிவம் கொண்டவன் அல்லவோ க்ருஷ்ணன்? (கறையணி இத்யாதி) - தனது விரோதியை அழித்து அதனால் ஏற்பட்ட இரத்தம் மற்றும் மாமிசக் கறையைக் கழுவுவதற்குக் கூட நேரம் இல்லாத காரணத்தால், அந்தக் கறை என்பதே ஆபரணம் போன்றுள்ள மூக்கு என்று கருத்து. அல்லது, கருடனுடைய தாயான வினதை தனது புத்திரனுடைய முகத்தைக் காணவேண்டும் என்ற மிகுந்த ஆசையாலே அவன் முட்டைக்குள் இருந்தபோது ஒரு செயலைச் செய்ததன் விளைவாக ஓர் அடையாளம் ஏற்பட்டது; அத்தகைய அடையாளமானது, ஸர்வேச்வரனுக்கு இருக்கின்ற ஸ்ரீவத்ஸம் என்ற மருவானது ஆபரணமாக உள்ளது போன்று, கருடனுக்கும் ஆபரணமாக உள்ளது என்று கூறலாம். (கடாவி) - ஏன் “நடத்தி” என்று கூறவேண்டும்? தேர் முதலானவற்றைச் செலுத்துவது போன்று கருடனைச் செலுத்துகிறான்; காரணம் இவனுடைய திருமேனி ஸ்பர்சத்தால் கருடன் நிமிர்ந்து நிற்கிறான்; ஆகவே சாட்டை கொண்டு அடித்துத் தேரைச் செலுத்துவது போன்று கருடனைச் செலுத்துகிறான். ஆனால் இவ்விதம் செய்தால் கருடனுக்குத் துக்கம் ஏற்படாதோ என்றால், கருடனுக்கு அது இனிமையாகவே உள்ளது. ஸ்தோத்ரரத்னம் - த்வதங்க்ரி ஸம்மர்த்த கிணாங்க சோபிநா - உன்னுடைய திருவடிகளுடைய தாக்குதல் காரணமாகத் தன் மீது ஏற்பட்ட தழும்புகள் கொண்ட கருடன் – என்றது காண்க.

**வ்யாக்யானம்** - (அசுரரைக் காய்ந்து) - இப்படி பெரியதிருவடியை நடத்தா நின்று கொண்டு ஆஸுரவர்க்கத்தை நசிப்பித்த. ஆச்ரிதருடைய போகோபகரணமே ஆச்ரித விரோதி நிரஸந பரிகரமுமென்கை. (அம்மான்) இப்படி சிறியத்தைப் பெரியது நலியாதபடி நோக்கும் நிருபாதிக சேஷி. (நிறைபுகழ் இத்யாதி) இந்த ரக்ஷணத்தாலே குறைவற்ற புகழை, ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே ஏத்தியும், பாடியும், ப்ரேம பாரவச்யத்தாலே இருந்தவிடத்திலிராதே ஆடியும் வர்த்திக்கிற நான், பகவத்போகத்துக்கு ஒரு ப்ரதிஹதி யுடையே னல்லேன் என்கிறார். (முட்டு) – விலக்கு.

**விளக்கம்** - (அசுரரைக் காய்ந்து) - இவ்விதம் கருடனை வழிநடத்தியபடி சென்று அசுரர்களின் கூட்டத்தை அழித்த. அடியார்களுடைய இன்பத்திற்குக் காரணமாக உள்ள உபகரணமாகிய கருடனே, அடியார்களுடைய விரோதிகளை அழிப்பதற்கும் கருவியாக உள்ளான். (அம்மன்) - இவ்விதம் சிறியவற்றைப் பெரியது துன்புறுத்தாமல் பாதுகாக்கும் இயல்பைத் தனது இயற்கையாகவே கொண்டவன். (நிறைபுகழ் இத்யாதி) - இத்தகைய காப்பாற்றுதல் காரணமாக குறைவின்று உள்ள புகழை, மிகுந்த ப்ரீதியின் விளைவாகத் துதித்தும் பாடியும் மிகுந்த ப்ரேமையால் உண்டான பரவசத்தால் இருந்த இடத்தில் நிற்க இயலாமல் ஆடியும் வாழ்கின்ற நான், பகவானின் இன்பத்தை அனுவிப்பதற்கு எந்த ஒரு இடையூறும் கொண்டவன் அல்லன்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த

# இராமாநுச நூற்றந்தாதி

## இதற்கு ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் அருளிச் செய்த வ்யாக்யானம் மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 107)

**வ்யாக்யானம்** – (சூனிய வாதரும்) சூந்யமே தத்வம் என்று சொல்லுகிற மாத்யமிகரும் சாக்ய வர்க்கத்திலேயாய் இருக்க, பிரித்து எடுத்தது தந் மத க்ரௌர்யத்தைப் பற்ற. பௌத்த மத ப்ரவர்த்தகர் வைபாஷிகன் என்றும், ஸௌத்ராந்திகன் என்றும், யோகாசாரன் என்றும், மாத்யமிகன் என்றும் நாலுவகைப்பட்டிருப்பரிறே. இவர்களில் முதலில் சொன்ன மூவர்க்கும், ஸ்வாப்யுபகதமாய் விஜ்ஞாந ரூபமாயிருக்கிற வஸ்துவினுடைய க்ஷணிகத்வம் ஸமாநமாயிருக்கும். பூத பௌதிகங்களும் சித்த சைதந்யங்களுமொழிய, வேறு சில ஆகமாதிகளை ஸ்வரூபேண அவர்கள் அங்கீகரித்ததில்லை.

**விளக்கம்** – (சூனிய வாதரும்) – “சூந்யமே உண்மை” என்று கூறுகின்ற மாத்யமிகர். இவர்கள் பௌதர்களில் ஒருவராக உள்ளபோதிலும், தனியாகப் பிரித்து உரைத்ததன் காரணம், இந்த மதத்தில் உள்ள கொடுமையான கருத்துக்களைக் கருத்தில் கொண்டே ஆகும். பௌத்த மதத்தில் வைபாஷிகர், ஸௌத்ராந்திகர், யோகாசாரர் மற்றும் மாத்யமிகர் ஆகிய நான்கு வகை உண்டு. இவர்களில் முதல் மூன்று பிரிவினர்களுக்கு ஞானமே ரூபமாக உள்ள வஸ்துவின் க்ஷணிகத்தன்மை என்பது ஒன்றாகவே உள்ளதாகும். இவர்கள் பூத பௌதிகம் மற்றும் சித்த சைதந்யம் ஆகியவற்றைத் தவிர வேறு எதனையும் ஏற்பதில்லை.

**வ்யாக்யானம் -** இவர்களிலே வைபாஷிகனாவான் பரமாணு ஸங்காதாத்மகமாய் ப்ரத்யக்ஷ ஸித்தமாய்க் கொண்டிருக்கும் ஜகத்து என்றும், தத் விஷய ஜ்ஞாநம் க்ஷணிகம் என்றும், ஜ்ஞாந விஷயமான பாஹ்யார்த்தங்களெல்லாம் உத்பத்தி விநாசங்களோடே கூடியிருக்கும் என்றும், க்ஷணிக விஜ்ஞாந ஸந்தாநமே ஆத்மா என்றும், இதில் ஸ்த்திரத்வ புத்தி ஸம்ஸாரம் அஸ்த்திரத்வ புத்தி மோக்ஷம் என்றும் சொல்லுமவன். ஸௌத்ராந்திகனாகிறான் ஜ்ஞாநத்திலே ஸ்வாகாரத்தை ஸமர்ப்பித்து நஷ்டமாய்ப் போந்த வர்த்தங்களெல்லாம் ஜ்ஞாநகதமான நீலாத்யாகாரத்தாலே அநுமேயங்களா யிருக்குமென்றும், அர்த்த வைசித்ர்ய க்ருதம் ஜ்ஞாந வைசித்ர்யம் என்றும், அநுமாந ஸித்தம் ஜகத், தத் விஷய ஜ்ஞாநம் க்ஷணிகம், அந்த க்ஷணிக விஜ்ஞாநம் தானுமே ஆத்மா, இதில் ஸ்த்திரத்வ புத்தி ஸம்சாரம், அஸ்த்திரத்வ புத்தி மோக்ஷம் என்றும் சொல்லுமவன்.

**விளக்கம் –** இவர்களில் வைபாஷிகர் என்பவர் பரமாணுக்களின் கூட்டமாகவும் ப்ரத்யக்ஷத்தால் காணத்தக்கதாகவும் உள்ளது ஜகத் என்றும், அத்தகைய விஷய ஞானம் சூந்யம் என்றும், இத்தகைய ஞானத்தின் விஷயமாக உள்ள அனைத்துமே உற்பத்தி மற்றும் அழிவுடன் காணப்படும் என்றும், க்ஷணிக புத்தியை எப்போதும் எண்ணியபடி உள்ளதே ஆத்மா என்றும், இதில் நிலையான தன்மையை அறிதலே ஸம்ஸாரம் என்றும், நிலையற்ற தன்மையை அறிதலே மோக்ஷம் என்றும் கூறுகிறார்கள். ஸௌத்ராந்திகர்கள் ஞானத்தில் தனது ஆகாரத்தை சமர்ப்பித்து இழந்து போன அனைத்தும் அந்த ஞானத்தினை உள்ளடக்கியதாக அநுமேயங்களாக இருக்கும் என்றும், அர்த்த வைசித்ர்ய க்ருதம் மற்றும் ஞான வைசித்ர்யம் என்றும், இந்த ஜகத் அனுமானத்தால் அறியப்படுகிறது என்றும், அதனைக் குறித்த ஞானம் க்ஷணிகம் என்றும், அத்தகைய க்ஷணிக விஜ்ஞானமே ஆத்மா என்றும், இது ஸ்திரமான உள்ளது என்னும் எண்ணமே ஸம்ஸாரம் என்றும், அஸ்திரமாக உள்ளன என்பது மோக்ஷம் என்றும் கூறுகிறார்கள்.

**வ்யாக்யானம் –** யோகாசாரனாகிறான் அர்த்தங்களைப் போலே ஸாகாரங்களா யிருந்துள்ள ஜ்ஞாநங்களும் ஸ்வயமே விசித்ரங்களா யிருக்கையாலே அர்த்த வைசித்யர்த்தத்தாலே ஜ்ஞாந வைசித்ர்யம் சொல்லவொண்ணாது என்றும், ஜ்ஞாநமே யுள்ளது பாஹ்யார்த்தங்க ளொன்றுமில்லை என்றும், அந்த ஜ்ஞாநம்

க்ஷணிகமென் றறிகை மோக்ஷம் என்றும் சொல்லுமவன். "யோகாசார: ஜகத் அபலபதி அத்ர ஸௌத்ராந்திக: தத் தீவைசித்ர்யாத் அநுமிதி பதம் வக்தி வைபாஷிகஸ்து ப்ரத்யக்ஷம் தத் க்ஷணிகயதி தே ரங்கநாத த்ரய: அபி ஜ்ஞாந ஆத்மத்வ க்ஷண பிதுரதே சக்ஷதே தாந் க்ஷிபாம:" என்று ஸங்க்ரஹேண இம்மூவருடைய மதங்களையும் உபந்யஸித்தருளினாரே பட்டரும்.

**விளக்கம்** - யோகசாரர் என்பவர்கள் பொருள்கள் போன்றுள்ள ஞானங்களும் தாங்கள் விசித்திரங்களாக உள்ளதால் அர்த்த வைசித்யர்த்தத்தாலே ஜ்ஞாந வைசித்ர்யம் கூற முடியாது என்றும், ஞானமே உள்ளது என்றும், வேறு எந்தப் பொருள்களும் இல்லை என்றும், அத்தகைய ஞானமும் க்ஷணிகம் என்று அறிவதே மோக்ஷம் என்றும் கூறுகிறார்கள். ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-8) – யோகாசார: ஜகத் அபலபதி அத்ர ஸௌத்ராந்திக: தத் தீவைசித்ர்யாத் அநுமிதி பதம் வக்தி வைபாஷிகஸ்து ப்ரத்யக்ஷம் தத் க்ஷணிகயதி தே ரங்கநாத த்ரய: அபி ஜ்ஞாந ஆத்மத்வ க்ஷண பிதுரதே சக்ஷதே தாந் க்ஷிபாம: - அழகிய மணவாளனே! பௌத்த மதத்தைச் சார்ந்த யோகசாரன் கூறுவதைக் கேட்டாயா? அவன் இந்த உலகத்தையே இல்லை என்று கூறுகிறான். இவர்களில் உள்ள ஸௌத்ராந்திகன் என்பவன் இந்த உலகமானது பலவகையான அனுமானங்கள் உண்டாகக் காரணமாக உள்ள, அனுமான ஹேது என்கிறான். வைபாஷிகன் என்பவன் நாம் கண்களால் ப்ரத்யக்ஷமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் உலகத்தை, நொடிக்கு நொடி அழியக்கூடியது என்று கூறுகிறான். ஆக மேலே கூறப்பட்ட மூவரும் ஞானம் என்பதே ஆத்மா என்றும், ஞானத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மா இல்லை என்றும், இந்த உலகம் க்ஷணநேரத்தில் மாறுகிறது என்றும் முரணாகக் கூறுகின்றனர். இவர்களை நாம் கண்டிக்கிறோம் - என்று இந்த மூவருடைய மதங்களை ஸ்வாமி பராசரபட்டர் சுருக்கமாக அருளிச்செய்தார் அல்லவோ?

**வ்யாக்யானம்** - மாத்யாமிகனாகிறான் ப்ரமாணமும் ப்ரமேயமும் ப்ரமாதாவுமிவை யுண்டென்றறிவது ப்ரமம், சூந்ய வாதமொன்றுமே ஸுகத்துக்கு பராகாஷ்டை என்றும், கீழ்ச் சொன்ன மூவரும் சித்த சைதந்யங்கள் உண்டு என்றும், க்ஷணிக விஜ்ஞாநம் உண்டு என்றும், சிஷ்யனுடைய ப்ரதிபத்தி ஸௌகர்யார்த்தமாகச் சொன்னார்களித்தனை என்றும், "ந ஸந்நாஸந் நஸதஸத் நசாப்யநுபயாத்மகம் சதுஷ்கோடி விநிர்முக்தம் தத்வம் மாத்யமிகோவிது:" என்கிறபடியே

ஸத்துமன்றிக்கே, அஸத்துமன்றிக்கே, ஸதஸத்துமன்றிக்கே, ஸதஸத் விலக்ஷணமுமன்றிகே, இந்நாலு கோடியிலும் உத்தீர்ணமாயிருப்பதொன்றே தத்வம் என்றும், சூந்யத்திலே சூந்யமென்றறிகையே மோக்ஷமென்றும் உத்ப்ரேக்ஷிக்குமவன்.

**விளக்கம் -** மாத்யமிகர் என்பவர்கள் ப்ரமாணம், ப்ரமேயம், அறிபவன் ஆகியவை உண்டு என்று அறிவது ப்ரமம் என்றும், சூந்யவாதம் மட்டுமே இன்பத்திற்கு இருப்பிடம் என்றும், இதுவரை கூறப்பட்ட பௌத்தமதத்தைச் சார்ந்த மற்ற மூவரும் சித்த சைதந்யங்கள் உண்டு என்றும், க்ஷணிக விஜ்ஞானம் உண்டு என்றும் கூறினார்கள் என்றும், ந ஸந்நாஸந் நஸதஸத் நசாப்யநுபயாத்மகம் சதுஷ்கோடி விநிர்முக்தம் தத்வம் மாத்யமிகோவிது:- என்பதற்கு ஏற்ப ஸத்தும் அல்ல, அஸத்தும் அல்ல, ஸத் அஸத் அல்ல, ஸத் அஸத் ஆகியவற்றைக் காட்டிலும் மாறுபட்டதும் அல்ல என்பதுடன் மட்டுமே அல்லாமல் இந்த நான்கு தத்வங்களுக்கும் அப்பாற்பட்டு உள்ள ஒன்றே தத்வம் என்றும், சூந்யத்தில் சூந்யம் என்றும் அறிதலே மோக்ஷம் என்றும் கூறுபவர்கள் ஆவர்.

ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்

...தொடரும்